## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 350/2019 | Date : 14.06.2023 | PW2 |
|---|---|---|
| Name: வின்சண்ட் | S/o. ஜான் | |
| Evidence Recorded Time: 12.01 P.M. to 12.20 P.M | | |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. ஈஸ்வரன் என்னை சாட்சி சொல்ல அழைத்தால் வந்தேன். நிரூபண பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகளை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன், அவர் தயார் செய்தார். ஈஸ்வரன், தேவராஜன் வகையறாக்களை எனக்கு கடந்த 40 ஆண்டுகளாக தெரியும். நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கம் ஒரு கி.மீ தூரம் இருக்கும். நான் ஆசிரியரகா பணிபுரிந்து வருகிறேனா என்றால் இல்லை விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம், சர்வே எண், வில்லங்கம் ஆகியவை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. வாதி, பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்று கூறியுள்ளேன், அவர்களுக்கிடையே பாகம் பிரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பாகப்பிரிவினை வாய்மொழியாக செய்துகொண்டார்களா அல்லது பத்திரப்பதிவு செய்து கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. எந்த வகையில் பாகம் பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாமல் தான் உத்தி, வாரி, வாய்க்கால், பைப், மரங்கள் ஆகியவை வாதிக்கும் பிரதிவாதிக்கும் பொதுவாக உள்ளதாக கூறியுள்ளது தவறு என்றால் வாதி, பிரதிவாதிகள் பொதுவாக காட்டை ஓட்டிக்கொண்டிருப்பதால் சொன்னேன். வாதி மற்றம் பிரதிவாதிக்கு எத்தனை கிணறு, ஆழ்துளை கிணறுகள் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தேவராஜன் பொது சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்ததாக கூறியுள்ளேன் அவ்வாறு எந்த தேதியில் விற்பனை செய்ய முயற்சி செய்தார் என்றால் கடந்த ஆறு வருடங்களுக்கு முன்பு விற்பனை செய்ய முயற்சி செய்தார், தேதி தெரியாது. ஈஸ்வரனுக்கு காட்டை வாங்கி கொடுக்கும் என்ற எண்ணதில் நான் சென்றேனா

என்றால் இல்லை, நான் வாங்கி விற்பனை செய்யும் எண்ணத்தில்தான் விலை பேச சென்றபோது பிரதிவாதி நிலத்தை விற்பனை செய்து விட்டதாக கூறினார். பிரதிவாதி யாருக்கு நிலத்தை விற்பனை செய்தார், யார் விலைக்கு வாங்கினார்கள் என்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. ஈஸ்வரன் என்ன காரணத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று விவரம் தெரியும், தடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு விவரம், தாவா சொத்து குறித்த விவரம் எதுவும் தெரியவில்லை என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>6–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

வழக்கு சொத்தில் எந்த பகுதியில் வண்டிபாதை அமைந்துள்ளது, அதன் நீளம், அகலம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வண்டிபாதை எங்கு அமைந்துள்ளது, அதன் நீளம், அகலம் தெரியாமல்தான் பஞ்சாயத்து பேசினோமா என்றால் பத்திரத்தை பார்த்துதான் பேசினோம். தேவராஜன் நிலத்திற்கு சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வாகன விபத்தில் அடிபட்டா என்றால் அடிபட்டது, எனது வழக்கில் ஈஸ்வரன் சாட்சியம் அளித்தாரா என்றால் இல்லை. வாகன விபத்து ஏற்பட்ட சமயம் எனக்கு வாதி ஈஸ்வரன் உதவியாக இருந்ததால் தற்போது நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் யார் யார் பங்கு பெற்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வண்டிபாதை தொடர்பாக இறுதியாக என்ன முடிவு பஞ்சாயத்தில் எடுக்கப்பட்டது என்றால் மாமூலாக செல்லக்கூடிய பாதையை வாதி கேட்டார் அவர்களுக்கு மற்றொரு பாதை செல்கிறது அதனை பயன்படுத்திக்கொள்ளும்படி சொன்னபோது பிரதிவாதிகள் அதனை கேட்கவில்லை, அதனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பஞ்சாயத்து பேசியபோது தேவராஜனிடம் நிலம் வாங்கிய நபரை வைத்துதான் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். தேவராஜனிடம் நிலம் வாங்கியது யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தற்போது ஈஸ்வரன் பயன்படுத்தி வரும் வண்டிபாதை புதிதாக அமைக்கப்பட்ட பாதையை பழைய பாதையா என்று தெரியுமா என்றால் பழைய பாதையை அழித்துவிட்டு, புதிய பாதை அமைக்கப்பட்டது அதில் வாதி செல்லவில்லை. வாதி தனக்கு பழைய பாதை தான் வேண்டும் என்று கேட்டார். ஈஸ்வரன் தற்போது எந்த

பாதையை பயன்படுத்தி வருகிறார் என்று தெரியுமா என்றால் தெரியும். விவசாய நிலங்களுக்கு அவர் வீட்டிலிருந்து வடக்காக செல்கிறார். விவசாய நிலங்களுக்கும், வீட்டிற்கு செல்வதற்கும் தனியாக பாதை உள்ளது என்றால் சரிதான்.

(5–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்